ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1780/5 - 2012 ඔක්තෝබර් මස 15 සඳුදා - 2012.10.15

*1780/5 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண சபை

*வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் சட்டத்தரணி அதுல விஜேசிங்க ஆகிய எனக்கு 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைச் சட்டத்தின் 41 வது சரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அந்த சட்டத்தில் 17(ஈ) சரத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள கட்டளை பின் காட்டப்பட்டுள்ளவாறு என அறிவிக்கப்படுகின்றது.*

*(சட்டத்தரணி) அதுல விஜேசிங்க,*
*முதலமைச்சரும் நிதி திட்டமிடலும் நீதியும் சமாதானமும் உள்ளூராட்சியும்*
*மாகாண நிர்வாகமும் மனித வள கல்வியும் கலாசார நடவடிக்கை காணி*
*போக்குவரத்து சூழல் சுற்றுலா முதலீட்டு நடவடிக்கை கூட்டுறவு அபிவிருத்தியும்*
*உணவு வழங்களும் விநியோக அமைச்சரும்.*
*வடமேல் மாகாணம்.*

*வடமேல் மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைச் சட்டத்தின் 17 (ஈ) சரத்தின் கீழ் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*1. இந்த கட்டளைச் சட்டம் பாதுகாப்பு மற்றும் வசதிகளை உள்ளடக்கிய கட்டளைச்சட்டமாக அறிமுகப்படுத்தப்படுவதுடன் 2012.09.01 முதல் அமுலுக்கு வருகின்றது.*

#### பகுதி I

*2. வடமேல் மாகாண வீதி பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் வெளியிடப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் அல்லது வேறு அதிகார சபையின் பிரயாணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து பஸ் வண்டிகளிலும் சேவை செய்கின்ற சாரதிகள் மற்றும் நடாத்துனர்கள் அனைவரும் குறிப்பிட்ட பஸ்ஸில் சேவை செய்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிகார சபை மூலம் அனுமதிக்கப்பட்ட சீருடையில் சேவையில் ஈடுபட வேண்டும்.*

*3. சாரதிகளும் நடாத்துனர்களும் அணிய வேண்டிய சீருடை இங்கு கீழ்வரும் முதலாவது அட்டவணையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சீருடையாக இருக்க வேண்டும் அத்துடன் அவ்வதிகார சபையினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ சின்னத்தை எவ்வேளையிலும் அணிந்திருத்தல் வேண்டும்.*

*4. சாரதிகளும் நடாத்துனர்களும் சீருடையில் அணிய வேண்டிய உத்தியோகபூர்வ சின்னம் இங்கு கீழ் வரும் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.*

*5. மேற் பகுதிக்கு அனுமதித்திருக்கும் (சட்டை) இக்கட்டளைகளில் குறிப்பிடும் சீருடையை அணியும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சாரதியோ அல்லது நடத்துனரோ கண்டைக் கால் வரையிலான ஒரு கால் சட்டையையோ சாரத்தையோ அணிந்திருக்க வேண்டும்.*

*6. சேவையில் ஈடுபடும் காலம் என்பது குறிப்பிட்ட பஸ் வண்டியில் குறிப்பிட்ட தினத்தில் முதல் பிரயாண ஆரம்பம் முதல் பிரயாணம் முடியும் வரையிலான பூரண காலமாகும்.*

*7. சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்னம் அதிகார சபை மூலம் நியமிக்கப்பட்டதற்கமைய மாற்றப்பட்டோ அல்லது அதற்கு மாற்றமாகவோ இருந்தால் சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்னம் அணியாமல் இருப்பதாகக் கருதப்படும்.*

*8. குறிப்பிட்ட பஸ் வண்டிக்கு பிரயாண முறை பெற்றுக் கொள்ளும்போது அந்த பஸ் வண்டியின் சாரதியோ அல்லது நடாத்துனரோ நியமிக்கப்பட்ட சீருடையை அணிந்து உத்தியோகபூர்வ சின்னத்தை அணிந்திருக்காவிட்டால் நேரக் குறிப்பாளரினால் குறிப்பிட்ட பஸ் வண்டிக்கு பிரயாண முறை கொடுக்கப்படாமல் இருப்பதுடன் அது சம்பந்தமாக குறிப்பிட்ட பொறுப்பதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.*

*9. அதிகார சபை மூலம் நியமிக்கப்பட்ட சீருடையை அணிந்து உத்தியோகபூர்வ சின்னத்தை அணிந்து சேவையில் ஈடுபட்டிருக்கின்றாரா என்று விசாரிப்பதற்கான பொறுப்பு குறிப்பிட்ட பஸ் வண்டியின் இறுதி அனுமதிப்பத்திர அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*10. அதிகார சபை மூலம் நியமிக்கப்பட்ட சீருடையை அணிந்து உத்தியோகபூர்வ சின்னத்தை அணிந்திராத சாரதியையும் நடாத்துனரையும் சேவையில் ஈடுபடுத்தும் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திர அதிகாரிகள் இந்த உத்தரவை மீறியதாகக் கருதப்படும்.*

*11. சாரதியோ அல்லது நடாத்துனரோ சீருடையை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் சீருடை, உத்தியோகபூர்வ சின்னம் சம்பந்தமாக அதிகார சபை மூலம் முன்னர் அறியத்தரப்படும் உபதேசங்கள் பின்பற்றப்படல் வேண்டும்.*

*12.* (i) *சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்னம் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மீறும் சாரதிகளும் நடாத்துனர்களும் குற்றமொன்றை செய்கின்றனர். அத்துடன் அவ்வாறு தவறொன்றைச் செய்யும்.*

| | ரூ. ச. |
|---|---|
| *(1) முதலாவது தடவைக்கு* | *250.00* |
| *(2) இரண்டாவது தடவைக்கு* | *500.00* |
| *(3) மூன்றாவது தடவைக்கு* | *1000.00* |

*சேவைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.*

*12.2. சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்னம் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மூன்றாவது முறைக்குப் பின்னரும் மீறுகின்ற சாரதிகளினதும் நடாத்துனர்களினதும் பதிவு இரத்துச் செய்யப்படுகின்ற அதே வேளையில் அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டதாக அதிகார சபை மூலம் அறியத்தந்து 07 நாட்களுக்குள் அதிகார சபை மூலம் விநியோகிக்கப்பட்ட சாரதிப்பத்திரம் அல்லது நடாத்துனர் பத்திரம் குறிப்பிட்ட சாரதி மூலம் அல்லது நடாத்துனர் மூலம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.*

*13.*(i) *மூன்றாவது முறைக்குப் பின்னரும் சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்னம் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மீறுகின்ற சாரதிகளும் நடாத்துனர்களும் சேவை செய்யும் பஸ் வண்டி துஷ்டப்பதிவு செய்யப்படும். அத்துடன் இரண்டு தடவைகள் துஷ்டப் பதிவில் இடம் பெறுவது குறிப்பிட்ட பஸ் வண்டியின் அனுமதிப்பத்திரம் இடை நிறுத்தப்படவோ இரத்துச் செய்யப்படவோ காரணமாக அமையும்.*

(ii) *அதிகார சபையின் தலைவரது உபதேசத்தைக் கேட்காமல் சீருடை அல்லது உத்தியோகபூர்வ சின்ன உத்தரவு மீறப்பட்டமை சம்பந்தமாக துஷ்டப் பதிவில் இடம் பெற்ற எந்தவொரு பஸ் வண்டிக்கும் பிரயாண முறை பெற்றுக் கொடுப்பதோ மாதாந்த போக்குவரத்து குறிப்பு விநியோகிப்பதோ அதிகார சபையின் வேறு எந்த அதிகாரி மூலமும் செய்யக் கூடாது.*

**முதலாவது அட்டவணை**


***சீருடை***: *கட்டைக்கை சாதாரண சட்டை ஒன்று. இடது பக்க மேல் சாக்குப்பை. கீழ் சாக்குப்பை இரண்டு பக்கமும். சீருடை முழுமையாக வான் நீல நிறத்தையுடையது. சட்டையின் துணி வகை கெஸ்பர் என்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.*

**சாரதி/நடாத்துனரின் சீருடை**



**இரண்டாவது அட்டவணை**

*உத்தியோகபூர்வ சின்னம்: உத்தியோகபூர்வ சின்னத்தின் வலப்பக்கத்தில் சேவையாளரின் முதலெழுத்துக்களுடனான பெயர் சாரதியா அல்லது நடாத்துனரா என்பன அத்துடன் நீளம் 2 1/2 அகலம் 1 1/2 அளவில் பிளாஸ்டிக் சதுர தகட்டில் மஞ்சல் நிற பின்னணியில் எம்போஸ் முறையில் எழுத்துக்கள் அமைந்திருத்தல் வேண்டும்.*




**பகுதி II**

*1. வடமேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் விநியோகிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் அல்லது வேறு அதிகார சபையின் கீழ் பயணிகள் பிரயாண சேவையில் ஈடுபட்டிருக்கும் அனைத்து பஸ் வண்டிகளிலும் பயணம் செய்யும் அனைத்து பயணிகளுக்கும் அதிகார சபை மூலம் அனுமதித்து சான்றிதழ் படுத்தப்பட்ட நுழைவுச் சீட்டு இயந்திரத்தினால் விநியோகிக்கின்ற நுழைவுச்சீட்டாக இருக்க வேண்டும்.*

*2. குறிப்பிட்ட பஸ் வண்டியின் பயணிகளுக்கு நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற இயந்திரம் ஒவ்வொரு 06 மாதத்திற்கொரு முறை அல்லது அதிகார சபையினால் உத்தரவிடப்படுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் அதிகார சபைக்கு முன்வைக்க வேண்டும்.*

*3. பயணிகளுக்கு நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற இயந்திரம் நடமாடும் பரீட்சகரினால் அல்லது பரீட்சிப்பதற்கு அதிகார சபையின் அதிகாரம் பெற்ற வேறு அதிகாரியொருவர் கேட்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட பஸ் வண்டியின் நடாத்துனரினால் உடனடியாக முற்படுத்தப்படல் வேண்டும்.*

*4. பயணிகளுக்கு நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற இயந்திரம் மூலம் விநியோகிக்கப்படுகின்ற அனைத்து நுழைவுச் சீட்டுக்களிலும் கீழ்க்காணும் விபரங்கள் முறையாக சரியாக விளக்கமாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும்:-*

*(1) பஸ் வண்டியின் பதிவு இலக்கம் ;*
*(2) பயணிகள் பயணச்சீட்டு இல.;*
*(3) திகதி;*
*(4) நேரம்;*

(5) பயண ஆரம்பம்;
(6) பயண முடிவு;
(7) கட்டணம்;
(8) நடாத்துனரின் பதிவிலக்கம்;
(9) சாரதியின் பதிவிலக்கம்;
(10) பஸ் வண்டி காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் காப்புறுதி நிறுவனம்.

5. நாளாந்தம் விநியோகிக்கும் நுழைவுச் சீட்டு பற்றிய அறிக்கை திகதி மாதம் வருடம் என்ற முறையில் தயாரித்து அதிகார சபையினால் வேண்டப்படுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் முன்வைப்பதற்கு குறிப்பிட்ட பஸ் வண்டியின் அனுமதிப்பத்திர உடைமையாளர் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

6. மாற்றப்பட்ட அல்லது விரிவுபடுத்தப்பட்ட தெளிவற்ற முறையில் அச்சிடப்பட்ட அதிகார சபையினால் உத்தரவிடப்பட்ட விபரங்கள் உள்ளடங்காத நுழைவுச் சீட்டுக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் நடாத்துனரால் பயணியொருவருக்கு விநியோகிக்கக் கூடாது.

7. நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு குறைபாடுள்ள அல்லது அச்சிடும் குறைபாடுள்ள இயந்திரம் நடாத்துனரினால் பயன்படுத்தப்படக்கூடாது.

8. நுழைவுச்சீட்டு விநியோகிக்கும் இயந்திரம் அவசர உபாதைக்கோ அல்லது செயலிழப்பிற்கு உட்படுத்தப்பட்டவுடனேயே அது பற்றி அருகாமையில் பஸ் நிறுத்துமிடத்தின் பொறுப்பதிகாரியிடம் அறிவித்து அவ்வாறு அறிவித்தமைக்காக அவரிடம் கையொப்பத்துடன் மாதாந்த ஓட்ட பத்திரத்தில் குறிப்பையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9. நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் அவசர உபாதைக்கு உட்படுத்தப்படும்போது நுழைவுச் சீட்டு வழங்குவதற்காக அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட நுழைவுச் சீட்டுப் புத்தகமொன்றை பஸ் வண்டியினுள் வைத்திருப்பதுடன் அவ்வாறு விநியோகிக்கப்படும் நுழைவுச் சீட்டு வீதி அறிக்கைக்கு தொடர்படுத்தி விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

10. நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற இயந்திரம் செயலிழக்கும் வண்ணம் அல்லது அச்சிடப்படும் நுழைவுச் சீட்டு குறைபாடுடன் கூடியதாக வித்தியாசத்திற்கு உட்படுத்தப்படல் கூடாது. அத்துடன் நுழைவுச்சீட்டு விநியோகிப்பதற்கான இயந்திரத்தை உகந்த முறையில் பயன்படுத்துவது நடாத்துனரின் கடமையாகும்.

11. பயணிகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற அனைத்து இயந்திரங்களுக்கும் வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் விநியோகிக்கப்படுகின்ற தரம் பற்றிய அனுகூல சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

12. (i) அதிகார சபையினால் அனுமதித்த சான்றிதழ் படுத்தப்படாத இயந்திரத்தால் நுழைவுச்சீட்டு விநியோகித்தல் நுழைவுச்சீட்டு விநியோகிக்கப்படாத குற்றத்திற்கு நடாத்துனர் ஆளாக்கப்படுவார்.-

அத்துடன்

| | ரூ. ச. |
|---|---|
| (1) முதலாவது தடவைக்கு | 250.00 |
| (2) இரண்டாவது தடவைக்கு | 500.00 |
| (3) மூன்றாவது தடவைக்கு | 1000.00 |

சேவைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

(ii) அதிகார சபையினால் உத்தரவிடப்பட்ட விபரங்கள் உள்ளடக்கப்படாத தெளிவில்லாத வித்தியாசப்படுத்தப்பட்ட விகாரமாக்கப்பட்ட நுழைவுச்சீட்டு விநியோகித்த நடாத்துனர் குற்றவாளியாக்கப்பட்டு.-

| | ரூ. ச. |
|---|---|
| (1) முதலாவது தடவைக்கு | 250.00 |
| (2) இரண்டாவது தடவைக்கு | 500.00 |
| (3) மூன்றாவது தடவைக்கு | 1000.00 |

சேவைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

(iii) நுழைவுச்சீட்டு இயந்திரமும் அந்த இயந்திரத்தின் மூலம் நுழைவுச்சீட்டு விநியோகிப்பது சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட I மற்றும் II உப அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் தவிர நுழைவுச்சீட்டு இயந்திரமும் பத்திரம் விநியோகித்தலும் பற்றிய உத்தரவை மீறும் நடாத்துனர்கள் குற்றவாளியாக்கப்படுவதுடன்.-

| | ரூ. ச. |
|---|---|
| (1) முதலாவது தடவைக்கு | 250.00 |
| (2) இரண்டாவது தடவைக்கு | 500.00 |
| (3) மூன்றாவது தடவைக்கு | 1000.00 |

சேவைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

(iv) அதிகார சபையினால் கேட்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பஸ் வண்டியின் நுழைவுச் சீட்டு விநியோகிக்கும் இயந்திரம் விநியோகிக்கப்பட்ட நாளாந்தம் விநியோகிக்கும் நுழைவுச் சீட்டு பற்றிய நாளாந்த மாதாந்த மற்றும் வருடாந்த அறிக்கை முன் வைப்பதற்கு முடியாமல் போகின்ற அனுமதிப்பத்திர உரிமையாளர் அல்லது போலி விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையை முன்வைக்கின்றவர் உத்தரவை மீறிய குற்றவாளியாகக் கருதப்படுவதுடன்,

| | ரூ. ச. |
|---|---|
| (1) முதலாவது தடவைக்கு | 250.00 |
| (2) இரண்டாவது தடவைக்கு | 500.00 |
| (3) மூன்றாவது தடவைக்கு | 1000.00 |

சேவைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

13. (i) நுழைவுச்சீட்டு இயந்திரப்பாவனை சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மூன்றாவது முறைக்குப் பின்னரும் மீறுகின்ற நடாத்துனர்களினது பதிவு இரத்துச் செய்யப்படுகின்ற அதே வேளையில் அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டதாக அதிகார சபை மூலம் அறியத்தந்து 07 நாட்களுக்குள் அதிகார சபை மூலம் விநியோகிக்கப்பட்ட நடாத்துனர் பத்திரம் குறிப்பிட்ட நடாத்துனர் மூலம் மீள ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(ii) மூன்றாவது முறைக்குப்பின்னரும் நுழைவுச்சீட்டு இயந்திரப்பாவனை சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மீறுகின்ற நடாத்துனர்கள் சேவை செய்யும் பஸ் வண்டி துஷ்டப்பதிவு செய்யப்படும். அத்துடன் இரண்டு தடவைகள் துஷ்டப் பதிவில் இடம் பெறுவது குறிப்பிட்ட பஸ் வண்டியின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்படுவதற்கோ இரத்துச் செய்யப்படுவதற்கோ காரணமாக அமையும்.

(iii) அதிகார சபையின் தலைவரது உபதேசத்தைக் கேட்காமல் நுழைவுச்சீட்டு இயந்திரப்பாவனை சம்பந்தமாக மீறப்பட்டமை சம்பந்தமாக துஷ்டப் பதிவில் இடம்பெற்ற எந்தவொரு பஸ் வண்டிக்கும் பிரயாண முறை பெற்றுக் கொடுப்பதோ மாதாந்த போக்குவரத்து குறிப்பு விநியோகிப்பதோ அதிகார சபையின் வேறு எந்த அலுவலரின் மூலமும் செய்யப்படக் கூடாது,

11-32/1

---

## வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் உடைய பயணிகள் போக்குவரத்து சேவைச் சட்டத்தின் 17 ஆம் சரத்தின் கீழ் போக்குவரத்து விடயத்துக்கு பொறுப்பான வடமேல் மாகாண முதலமைச்சரால் 1996.11.08 ஆந் திகதி 1998.09.11 ஆந் திகதி 2004.01.16 ஆந் திகதி 2005.12.22. ஆந் திகதி 2001.12.22 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிக்கையில் 04(அ) பிரிவில் பிரசித்தப்படுத்தப்பட்ட கட்டளைச் சட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என கட்டளை இடுகின்றேன்.

(சட்டத்தரணி) அதுல விஜேசிங்க,
முதலமைச்சரும் நிதி திட்டமிடலும் நீதியும் சமாதானமும் உள்ளூராட்சியும்
மாகாண நிர்வாகமும் மனித வள கல்வியும் கலாசார நடவடிக்கை காணி
போக்குவரத்து சூழல் சுற்றுலா முதலீட்டு நடவடிக்கை கூட்டுறவு அபிவிருத்தியும்
உணவு வழங்கலும் விநியோக அமைச்சரும்.
வடமேல் மாகாணம்.

### திருத்தம்

03.012(ஈ) நடைமுறையில் உள்ள 03.02(ஈ) இல் (i) மற்றும் (ii) சரத்துக்கள் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரத்து சேர்க்கப்படும் :-

"வடமேல் மாகாணத்தினுள் அல்லது மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொள்ளும் வசு வண்டி ஒன்றுக்கான மாதாந்த கட்டணமாக 1000 ரூபா செலுத்தி பிரத்தியேக போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்."

11.03 நடைமுறையில் உள்ள 11.03 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 1000 ரூபாவாக திருத்தியமைக்கப்படுகின்றது.

11.04 நடைமுறையில் உள்ள 11.04 (உ) உப சரத்துக்கு அடுத்து 11.04 (ஊ) சரத்தில் " பிரத்தியேக போக்குவரத்து அனுமதிப் பத்திரமின்றி போக்குவரத்துச் செய்தால் 1500 ரூபா" அறவிடப்படுவதுடன் நடைமுறையில் உள்ள 11.04 (ஊ) உப சரத்து 11.04 (அ) ஆக மீள் இலக்கமிடல் மூலம் திருத்தப்படும்.

11.05 நடைமுறையில் உள்ள 11.05 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 1000/- ரூபாவாக திருத்தியமைத்தல்.

15.01 (அ) நடைமுறையில் உள்ள 15.01 (அ) முதல் (ஆ) வரை அனைத்து சரத்துக்களும் நீக்கப்பட்டு 15.01(அ) ஆக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரத்து சேர்க்கப்படும்.

"வடமேல் மாகாணத்துள் கைத்தொழிற்பேட்டை பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் அனைத்து தனியார் வசு வண்டி 5000 ரூபா வருடாந்த கட்டணம் வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகா சபைக்கு செலுத்தி அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்"

15.01(அ) நடைமுறையில் உள்ள 15.01 இல் (இ) சரத்து 15.01 (ஆ) ஆக திருத்தப்படும்.

16 (அ) நடைமுறையில் உள்ள 16(அ) இல் கட்டணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படும்.-

| | வாகன வகுப்பு | கட்டணம் ரூபா. ச. |
|---|---|---|
| (1) | மோட்டார் வண்டி A, A1 | 1,000. 00 |
| (2) | முச்சக்கர வண்டி B1 | 1,500. 00 |
| (3) | இலகு வாகனம் B | 8,500. 00 |
| (4) | பயிற்றப்படாத இலகு B | 4,000. 00 |
| (5) | பார வாகனம் D | 10,000. 00 |
| (6) | பார வாகனம் பயிற்றப்படாத D | 5,000. 00 |
| (7) | முன் பயிற்சி பரிசீலனை | 500. 00 |
| (8) | திருத்தியமைக்கப்பட்ட பயிற்சி (மணித்தியாலயத்திற்கு) | 1,000. 00 |

16 (ஊ) 16 (உ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொடுக்கும்போது அதிகாரப் பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படும்:-

| | | ரூபா. ச. |
|---|---|---|
| (1) | A வழிக்காக | 100,000. 00 |
| (2) | B வழிக்காக | 75,000. 00 |
| (3) | C வழிக்காக | 50,000. 00 |
| (4) | D, E வழிக்காக | 25,000. 00 |
| (5) | சொகுசு வசு வண்டிக்காக | 100,000. 00 |

16 (உ) பிரிவிற்கு பின் கீழ்க்காணப்படும் பிரிவு சேர்க்கப்படும் :-

(எ) வடமேல் மாகாணத்தின் வசு வண்டியை விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்காக ரூ. 1000.00 சேவை கட்டணம் அறவிடப்படும்.

(ஏ) புதிய அதிகாரப் பத்திரம் வழங்கும் போது தற்போதுள்ள ஒப்பந்தத்தினை பாதுகாப்பதற்காக ரூ. 10000.00 மீள் செலுத்தப்படும் கட்டுப் பணத்தினை அறவிடப்படும். ஏதாவதொரு முறையில் அதிகாரப்பத்திர உரிமையாளர் அதிகாரப் பத்திர ஒப்பந்தத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் அவரின் பிணைக் கட்டுப் பணம் மீள் செலுத்தாது இரத்துச் செய்து வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும்.

(ஒ) மாதாந்த போக்குவரத்து பதிவு பத்திரம்/உட்பிரவேசப் பத்திரம் உரிய தினம் பெற்றுக் கொள்ளாத சந்தர்ப்பத்தில் அந்த காலதாமத காலம் ஒரு மாத காலத்தை கடந்து இருப்பின் ஒரு மாதத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு ரூ. 100.00 ஆக மேலதிக சேவை கட்டணம் அறவிடப்படும்.

11-32/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.